பக்கங்கள்:-13

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 09 | புதன்கிழமை | 25.09.2024 | அதிர்வு 054

## பெரும்பான்மை ஆசனங்கள் மொட்டுக்குக் கிடைக்குமாம்

### இப்படி மஹிந்த நம்பிக்கை



"வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மையான ஆசனங்கள் மொட்டுக் கட்சிக்குக் கிடைக்கும். அதற்குத் 06▶





# நாடாளுமன்றம் நள்ளிரவு கலைப்பு

## நவம்பர் 14 இல் பொதுத் தேர்தல்

+ வேட்புமனுத் தாக்கல் ஒக்டோபர் 4 - 11 வரை
+ புதிய நாடாளுமன்றம் கூடல் நவம்பர் 21

இலங்கை நாடாளுமன்றத்தைக் கலைக்கும் உத்தரவுடனான அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று நள்ளிரவுடன் 9ஆவது நாடாளுமன்றம் கலைக்கப்படுகின்றது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. 06▶

## வட மாகாண ஆளுநராக வேதநாயகன் நியமனம்

### ஜனாதிபதி முன்னிலையில் இன்று பதவிப் பிரமாணம்



(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாண ஆளுநராக யாழ்ப்பாணம் மாவட்ட முன்னாள் அரச அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் இன்று புதன்கிழமை பதவியேற்கின்றார.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அரச அதிபராக வேதநாயகன் பணியாற்றிய வேளை, அப்போதைய யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் 06▶




நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள இந்தச் சூழலில், வரும் சனிக்கிழமை வவுனியாவை மையப்படுத்தி முக்கிய நாளாக தமிழர் தரப்புக்கு அமையப் போகின்றது.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பெறுபேறுகள், நடக்கப் போகின்ற பொதுத் தேர்தல் ஆகியவற்றுக்கான சூழலில் அவை குறித்து ஆராய்வதற்காக பிரதான தமிழ் கட்சியான இலங்கை தமிழரசு கட்சியின் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரமும் தகுதியும் கொண்ட மத்திய குழு சனியன்று வவுனியாவில் கூடுகின்றது.

தேர்தல் அறிவிக்கப்பட்டு விட்டால் கட்சியின் செயலாளரின் கைகள்தான் ஓங்கும். அந்த வரிசையில் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை அதன் பொதுச்செயலாளர் மருத்துவர் ப.சத்தியலிங்கம்தான் இனி பிரபலஸ்தர். விடயங்கள் அவரை சுற்றித்தான் இனி கட்டப்பட 06▶

# அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் நியமனம்



அமைச்சுக்களுக்கான புதிய செயலாளர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர். ஜனாதிதி அநுரகுமார திஸநாயக்கவி னால் இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, பிரதமரின் செயலாளராக பிரதீப் சப்பு தந்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.

நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுப்பு திட்டமிடல் மற்றும் சுற்றுலா அமைச்சின் செயலாளராக மஹிந்த சிறிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் செயலாளராக அருணி விஜேவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், தொழில் அமைச்சின் செயலாளராக பிரதீப் யசரத்ன நியமிக் கப்பட்டுள்ளார்.

போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செய லாளராக கே.டி.எஸ்.ருவன்சந்திர நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக திலகா ஜயசுந்தர செயற்படவுள்ளார்.

பெண்கள், சிறுவர் மற்றும் இளைஞர் விவகாரம், விளை யாட்டுத்துறை அமைச்சின் செயலாளராக கே.மகேசன் நியமனம் பெற்றுள்ளார்.

வர்த்தகம், வணிகம், உணவு பாதுகாப்பு, கூட்டுறவு அபிவி ருத்தி, கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பதவி எம்.எம்.நயிமுதீனுக்கு வழங்கப்பட்டுள்ளது.



கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளராக எம்.பீ. அத்தபத்து நியமிக் கப்பட்டுள்ளார்.

சுகாதார அமைச்சின் செயலாளராக வைத்திய நிபுணர் பாலித மஹிபால நிய-மிக்கப்பட்டுள்ளார்.

சுற்றாடல், வனஜீவராசிகள், வனவளம், நீர் விநியோகம், பெருந்தோட்டக் கைத்தொழில், சமூக உட்கட்டமைப்பு வசதி கள் அமைச்சின் செயலாளராக பிரபாத் சந்திரகீர்த்தி நிய மிக்கப்பட்டுள்ளார்.

விவசாயம், காணி, கால்நடை வள, நீர்ப்பாசனம், கடற் றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் செயலாளராக என்.எம்.விக்கிரமசிங்க நியமனம் பெற்றுள்ளார்.

புத்த சாசனம், சமய மற்றும் கலாசார விவகாரம், தேசிய ஒருமைப்பாடுகள், சமூக பாதுகாப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளராக ரஞ்சித் ஆரியரத்ன நியமிக்கப் பட்டுள்ளார். வலுசக்தி அமைச்சின் செயலாளராக பேராசிரி யர் உதயங்க ஹேமபால நியமிக்கப்பட்டுள்ளார்.

# புதிய ஜனாதிபதி அநுரவுடன் இணைந்து செயற்படத் தயார்

## சர்வதேச நாணய நிதியம் அறிவிப்பு

இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க மற்றும் அவரது குழுவினருடன் இணைந்து செயற்பட எதிர்பார்ப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இதுவரை ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ள வெற்றியின் அடிப்படையில் இலங்கையின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்வது தொடர்பில் நடவடிக்கை எடுக்க எதிர்பார்த்துள்ளதாக சர்வதேச நாணய நிதியத்தின் பேச்சாளரொருவர் குறிப்பிட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டு இறுதியில் காணப்பட்ட நாட்டின் 17.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான சர்வதேச வர்த்தகக் கடன்களை மறுசீரமைப்பது தொடர்பில் இலங்கை மற்றும் சர்வதேச இறையாண்மை முறி உரிமையாளர்களின் பிரதிநிதிகளுக்கும் இடையே கொள்கையளவிலான இணக்கப்பாடு ஏற்படுத்திக்கொள்ளப்பட்டமையை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது.

கடன் வேலைத்திட்டத்தின் மூன்றாவது கட்டம் தொடர்பில் நாட்டின் புதிய நிர்வாகத்துடன் கலந்துரையாடத் தயாராக உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

# விஜித்த ஹேரத்துக்கு பல அமைச்சு பதவிகள்



ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான புதிய அமைச்சரவை நேற்று பதவியேற்றது.

இதன்படி, தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத்துக்கு பல அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள், தேசிய ஒருமைப்பாடு, சமூக பாதுகாப்பு மற்றும் பொதுசன ஊடக அமைச்சு, போக்குவரத்து, பெருந்தெருக்கள், துறைமுக மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சு, சுற்றாடல், வனஜீவராசிகள், வனவளங்கள், நீர்வழங்கல், பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு, கிராமிய மற்றும் நகர அபிவிருத்தி, வீடமைப்பு மற்றும் கட்டுமானத்துறை ஆகிய அமைச்சுகளின் பொறுப்பு, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் விஜித்த ஹேரத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

# மேல் மாகாண ஆளுநரும் நேற்றும் பதவி விலகினார்



மேல் மாகாண ஆளுநரான மார்ஷல் ஒஃப் த எயார் ரொஷான் குணதிலக்கவும் பதவி விலகியுள்ளார்.

அவர் தமது பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

இதற்கு முன்னதாக 7 மாகாண ஆளுநர்கள், தங்களது பதவியிலிருந்து விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் முறைகேடு தொடர்பில் ஒருவர் கைது

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் முறைகேடு தொடர்பில் மேலதிக வகுப்பு ஆசிரியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தரம் 2 புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் கசிந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெற்றோர் குழுவொன்று முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னதாக முறைப்பாடு செய்திருந்தது.

அத்துடன், மேற்படி சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் ஆகியன விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

இந்த விசாரணைகளின் அடிப்படையில் முன்னதாக கைது செய்யப்பட்ட மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தின் திட்டமிடல் பிரிவின் பணிப்பாளர் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# எரிபொருள் விநியோகத்துக்கான நிலக்கரி கையிருப்பில் உள்ளது

## முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தகவல்

எந்தவித தடங்கலும் இன்றி மின்னுற்பத்தி மற்றும் எரிபொருளை விநியோகிப்பதற்கு தேவையான கனிய எண்ணெய் மற்றும் நிலக்கரி கையிருப்பில் உள்ளதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி முன்னாள் அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் எக்ஸ் தளத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

கடந்த 20 ஆம் திகதி வரை, ஒரு லட்சத்து 23,888 மெட்ரிக் தொன் டீசல் கையிருப்பில் இருந்தாக அந்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

13,627 மெட்ரிக் தொன் லீற்றர் சுப்பர் டீசல் கையிருப்பில் உள்ளது.

இதுதவிர 90,972 மெட்ரிக் தொன் ஒக்டேன் 92 ரக பெற்றோலும், 18,729 மெட்ரிக் தொன் ஒக்டேன் 95 ரக பெற்றோலும் கையிருப்பில் இருந்ததாக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சராக செயற்பட்ட கஞ்சன விஜேசேகர தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.




# முட்டையின் விலை வீழ்ச்சி

சந்தையில் முட்டை ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைவடைந்துள்ளதாக முட்டை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

உற்பத்தி அதிகரிப்பு காரணமாகவே முட்டையின் விலை குறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய தற்பொழுது 28 ரூபா முதல் 30 ரூபா வரையில் முட்டைகள் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# மலையக மார்க்கத்தில் ரயில் சேவை பாதிப்பு

மலையக மார்க்கத்திலான ரயில் சேவை நேற்று பாதிப்படைந்தது என பதுளை ரயில் கட்டுப்பாட்டு அறை தெரிவித்துள்ளது.

பதுளையில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த பயணிகள் மற்றும் சரக்கு ரயில் ஒன்று நேற்று மதியம் எல்ல மற்றும் தெமோதரை ரயில் நிலையங்களுக்கு இடையில் தடம் புரண்டுள்ளது.

ரயிலை மீள் தடமேற்றும் பணிகள் தொடருந்தும் இடம்பெற்று வருவதாக பதுளை ரயில் கட்டுப்பாட்டு அறை தெரிவித்தது

# 14 வயது மாணவன் மீது பாலியல் துஷ்பிரயோகம் வவுனியாவில் பயிலுநர் ஆசிரியர் ஒருவர் கைது!

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 14 வயது மாணவன் ஒருவனைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்படும் பயிலுநர் ஆசிரியை ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா தெற்கு வலயத்திற்குட்பட்ட பிரபல பாடசாலை ஒன்றில் கட்டுறுப் பயிலுநராக பணியாற்றிய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பெண் ஆசிரியர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

14 வயது மாணவன் ஒருவரைப் பயிலுநர் பெண் ஆசிரியர் பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்தார் எனவும், இது தொடர்பில் பாடசாலையில் முறைப்பாடு செய்தும் தீர்வு கிடைக்காத நிலையில் மாணவனின் பெற்றோரால் சிறுவர் பிரிவு மற்றும் வவுனியா பொலிஸ் என்பவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டது எனவும் கூறப்பட்டது.

முறைப்பாட்டையடுத்து மாணவனின் வாக்குமூலம் பெறப்பட்டமையுடன், மாணவன் மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வாக்கு மூலத்தின் அடிப்படையில் பயிலுநர் ஆசிரியர் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# சாதாரண தரப் பரீட்சையின் பெறுபெறுகளை 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடப்படும்



கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபெறுகளை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் வெளியிடவுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளுக்கான ஆவணங்களைத் தயாரிக்கும் பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர குறிப்பிட்டார்.

இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு 3,87,648 பாடசாலை பரீட்சார்த்திகளும், 65,331

தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் தோற்றினர் எனப் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டி இருக்கும்.

தமிழரசுக் கட்சியின் தர நிலையை அதன் தலைவர் மாவை சேனாதிராஜா நடுவீதிக்குக் கொண்டு வந்துள்ள நிலையில் கட்சியில் அவரின் பிடி தளர்ந்து வருவதாகக் கருதப்படுகின்றது.

இதேசமயம் வருகின்ற பொதுத் தேர்தலை பொது அமைப்புகளின் ஒன்றிப்பாக முன்னெடுப்பது குறித்து ஆராய்வதற்காக பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் அன்றைய தினம் வவுனியாவில் கூடவிருக்கின்றனர் என்று ஒரு தகவல் தெரிவித்தது.

இதற்கிடையில் –

முன்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய பங்காளி கட்சியின் தலைவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் இலங்கை தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜாவை அவரது இல்லத்தில் சந்திக்கவிருக்கின்றனர் என்று தெரிய வந்தது. மீண்டும் கூட்டமைப்பாகச் சேர்ந்து மக்களை சந்தித்தால்தான் தமக்கு வெற்றி வாய்ப்புக் கிட்டும் என்று கருதியே மீண்டும் ஒற்றுமைக்கான வாய்ப்புக் குறித்து மாவையுடன் பேச முயற்சிக்கின்றனர் முன்னைய கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியினர்.

இரண்டாம், மூன்றாம் மட்டத் தலைவர்கள் பங்குபற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல் என்றால் பிரிந்து நின்று தேர்தலை எதிர்கொள்வது குறித்து கவலையின்றி நடவடிக்கை எடுத்த தமிழ் தலைவர்கள், தமக்கு தமக்கு என்றதும் ஐக்கியம் குறித்து பேசுகின்றார்கள்.

தமிழர் தரப்பை பொறுத்தவரை இந்தத் தேர்தல் இன்னும் பிரிந்து நின்று மோதுவதற்குத் தமிழ்க்கட்சிகளுக்கு வழங்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது.

## பெரும்பான்மை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்காக ஏற்படுத்தப் போகும் மாபெரும் கூட்டணியில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இணையாது என்றும் அவர் கூறினார்.

பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமைக் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற அரசியல் உயர்பீடக் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

"அடிமட்ட அளவில் திட்டங்களை வகுத்து, மொட்டுக் கட்சியை மீண்டும் வலுவான நிலைக்குக் கொண்டுவரும் செயற்பாடு முன்னெடுக்கப்படும்" – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# புதிய நிர்வாகத் தெரிவும் காலபோகக் கூட்டமும்

இருபாலை தெற்கு கமக்காரர்கள் அமைப்பின் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நெல் செய்கையாளர்களுக்கான வருடாந்த காலபோகக் கூட்டமும் தலைவர் தவராஜா தர்ஷன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இருபாலை தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் (வேளாதோப்பு அம்மன் கோயிலுக்கு அருகில்) இந்தக் கூட்டம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வட மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முயற்சியின் காரணமாக யாழ். மாவட்டத்தில் இருந்து தூக்கியெறியப்பட்டார்.

இவ்வாறு தூக்கியெறியப்பட்ட சமயம் அவரது ஓய்வுக்கு 3 மாத காலமே இருந்த போதும் அவர் பதவியைத் துறந்தார். இவ்வாறு பதவி துறந்தவரை எஞ்சிய 3 மாத காலத்துக்கான சம்பளத்தையும் அரசுக்குச் செலுத்தும்படியாக அப்போதைய யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் வியூகம் வகுத்த சமயம் அந்த 3 மாத கால சம்பளத்தையும் அரசுக்கு மீளச் செலுத்தியே அவர் ஓய்வு பெற்றுச் சென்றிருந்தார்.

இந்தநிலையில் தற்போதைய ஆட்சி மாற்றத்தின் பின்னர் முன்னைய ஆட்சியில் பழிவாங்கப்பட்டவர் என்ற அடிப்படையில் வடக்கு மாகாண ஆளுநர் பதவியை வழங்க ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தரப்பு முன்வந்தமையால் வேதநாயகன் இன்று ஜனாதிபதி முன்னிலையில் ஆளுநராகப் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார்.

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

அத்துடன் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான பொதுத் தேர்தலை எதிர்வரும் நவம்பர் 14ஆம் திகதி நடத்துவதற்கும் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் 4 முதல் 11ஆம் திகதி நண்பகல் வரை இதற்கான வேட்பு மனுக்களைப் பெறுவதற்கான திகதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புதிய நாடாளுமன்றத்தை எதிர்வரும் நவம்பர் 21ஆம் திகதி கூட்டுவதற்கும் குறித்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் வேளையில், தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைப்பதாக, அநுரகுமார திஸாநாயக்க மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.









# ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகமாக வைத்தியர் நஜித் இந்திக்க நியமிக்கப்பட்டார்

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் ஜனாதிபதி ஊடகப் பணிப்பாளர் நாயகமாக வைத்தியர் நஜித் இந்திக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாந்தோட்டை ரன்ன மத்திய கல்லூரி மற்றும் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான வைத்தியர் நஜித் இந்திக்க, கொழும்பு மருத்துவ பீடத்தில் தனது மருத்துவ பட்டப்படிப்பை நிறைவு செய்தார்.

கடந்த 05 வருடங்களில் பல அரச வைத்தியசாலைகளில் வைத்தியராகவும் வைத்திய அதிகாரியாகவும் இவர் கடமையாற்றியுள்ளார்.

வைத்தியர் நஜித் இந்திக்க பல்கலைக்கழக மாணவர் செயற்பாட்டாளர் மற்றும் அரசியல் செயற்பாட்டாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கையின் அரசியல் வானில் சரித்திர மாற்றம் நிகழ்ந்துள்ளது!

## புதிய ஜனாதிபதி அநுரவுக்கு சுகு ஸ்ரீதரன் வாழ்த்து



இலங்கையின்அரசியல்வானில்சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் 76 கண்டிராத சரித்திர மாற்றம் நிகழ்ந்துள்ளது என்று அரசியல் சமூக செயற்பாட்டாளர் சுகு ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“இந்த மாற்றத்திற்கான நெடும் பயணத்தில் மக்கள் விடுதலை முன்னணி தேசிய மக்கள் சக்தியாகப் பரிணமித்தது.

தோழர் அநுரகுமார திஸாநாயக்க நாட்டின் தலைவராகப் பதவியேற்றுள்ள இந்தச் சரித்திர தருணத்தில் எம் மனம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

“பாழ் பட்டு வறுமை மிஞ்சிப்” போன இந்த நாட்டின் மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றவும், அனைத்து இன, மத சமூகங்களிடையே ஜனநாயக பூர்வமான நல்லுறவை ஏற்படுத்தவும் எம்மாலான அனைத்து பங்களிப்புகளையும் வழங்குவோம். வாழ்த்துக்கள் தோழர் அநுர!” – என்றார்.



# ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று நாட்டு மக்களுக்கு விசேட உரை

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த விசேட உரை இன்று இரவு 7.30 மணிக்கு அனைத்து இலத்திரனியல் ஊடகங்களிலும் நேரடியாக ஒளிபரப்பப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நாடாளுமன்றக் கலைப்பு

எதிர்பார்க்கப்பட்ட படி நாடாளுமன்றத்தைப் புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கலைத்து விட்டார்.

இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் இன்னும் 11 மாதங்கள் இருக்கையில் அது கலைக்கப் பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றம் கலைக்கப்படும் சமயம் இருக்கும் அமைச்சரவையே புதிய நாடாளுமன்றம் கூடும் வரை காபந்து அமைச்சரவையாகச் செயல்படும். அச்சமயம் அமைச்சுகளை மாற்றி அமைக்கலாமே தவிர காபந்து அமைச்சரவைக்கு வெளியில் இருந்து புதிய அமைச்சர்களைக் கொண்டு வர முடியாது.

அதனால்தான் தமது தேசிய மக்கள் சக்தியின் எம்.பிக்களாக இருந்த மூவரையும் உள்ளடக்கி ஓர் அமைச்சரவையை நேற்று பகல் பதவி ஏற்க வைத்த பின்னர், நேற்று நள்ளிரவு நடைமுறைக்கு வரக் கூடியதாக நாடாளுமன்றத்தை கலைத்திருக்கின்றார் புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க.

முடிவுற்ற இந்த நாடாளுமன்றம் ஐந்து வருடங்களை பூர்த்தி செய்யவில்லை. அதனால் அந்த நாடாளுமன்றுக்கு புதுமுகமாக வந்த அதன் உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் கிடைக்காது. அந்த நாடாளுமன்றம் தனது பதவி காலத்தை முழுமையாகப் பூர்த்தி செய்திருந்தால் அவர்கள் அனைவருக்கும் ஓய்வூதியம் கிடைக்கும் வாய்ப்பு கிட்டியிருக்கும். இப்போது அதற்கு வெட்டு விழுந்து விட்டது.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றம் 2020இல் பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டது. ஆனால் 2022 இல் அரசுக்கும், ஜனாதிபதிக்கும் எதிரான மக்கள் எழுச்சிப் போராட்டமான 'அறகலய' உச்சம் பெற்று நாட்டின் ஜனாதிபதி நாட்டை விட்டு ஓட்டம் பிடித்த போது, அந்த நாடாளுமன்றம் மக்கள் பிரதிநிதித்துவ கட்டமைப்பாக செயல்படும் தார்மீக உரிமையை இழந்துவிட்டது என்பதுதான் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உட்பட தேசிய மக்கள் சக்தியினதும் ஏனைய பிரதான எதிர்க்கட்சிகளினதும் மாற்ற முடியாத நிலைப்பாடாக இருந்து வந்தது.

அதனால் புதிய ஜனாதிபதி தாம் பதவியேற்ற கையோடு, ஏற்கனவே தார்மீக உரிமையை இழந்த அந்த நாடாளுமன்றத்தை அவர் கலைத்து விட்டிருக்கின்றார்.

வழமையாக முன்கூட்டியே நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கும்போது அது தொடர்பான பிரகடனத்தில் பின்வரும் அம்சங்கள் கட்டாயம் இடம் பெற்றிருக்க வேண்டும் என அரசமைப்பு வலியுறுத்துகின்றது.

1. நாடாளுமன்றம் கலைக்கப்படும் நாள்.

2. புதிய நாடாளுமன்றம் கூட்டப்படும் நாள்.

3. பொதுத்தேர்தல் நடைபெறும் நாள்.

4. வேட்பு மனுக்கள் ஏற்கும் ஆரம்ப தினம் மற்றும் முடிவு நாள்.

5. வேட்பு மனுக்களை மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர்கள் ஏற்றுக் கொள்ளும் இடங்கள் பற்றிய விவரங்கள் அடங்கிய அட்டவணை.

- இவையெல்லாம் தற்போது நாடாளுமன்றக் கலைப்பை ஒட்டி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க விடுத்த அறிவிப்பில் இடம் பெற்றுள்ளன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு சரியாக இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னரே அடுத்த புதிய நாடாளுமன்ற அமர்வு இடம் பெற வேண்டும் என்று ஜனாதிபதி நாடாளுமன்ற கலைப்புத் தொடர்பான தமது அறிவித்தலில் தெளிவு படுத்தி இருக்கின்றார்.

ஆக, பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாட்டின் அரசியல் தரப்புகளுக்கு குறுகிய கால அவகாசமே கிட்டியிருக்கின்றது.





# திருப்பதி லட்டில் குட்கா புகையிலை; குற்றச்சாட்டை மறுத்த தேவஸ்தானம்

திருப்பதி வெங்கடாசலபதி கோவிலில் வழங்கப்படும் லட்டில் குட்கா புகையிலை பொருள்கள் இருப்பதாகப் பக்தர் ஒருவர் வெளியிட்டுள்ள காணொளி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா – கம்மம் மாவட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் திருப்பதி கோவிலுக்குச் சென்றவேளை, அங்கிருந்து வாங்கி வந்த லட்டு பிரசாதத்தை உறவினர்களுக்கு எடுத்துக் கொடுக்கும்போது, அதிலிருந்து குட்கா புகையிலை பொருல்கள் உதிருவதாகக் காணொலி எடுத்துச் சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இந்நிலையில் இந்த குற்றச்சாட்டைத் திருப்பதி தேவஸ்தானம் முற்றிலுமாக மறுத்துள்ளது.

மேலும் வதந்திகளைப் பரப்ப வேண்டாம் என்று கோரிக்கை விடுத்துள்ளது.

இதற்கு முன்பு, திருப்பதி கோவிலில் வழங்கப்படும் லட்டு, விலங்கு கொழுப்பு கலந்த நெய்யினால் தயாரிக்கப்படுகிறது என்ற சர்ச்சை வெடித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# சோனியாவுக்கு எதிரான குற்றச்சாட்டு கங்கனா மன்னிப்பு கோர வேண்டும்

## காங்கிரஸ் வலியுறுத்தல்

சோனியாவுக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பில் பா.ஜ.க. எம்.பி.யான நடிகை கங்கனா ரனாவத் மன்னிப்பு கோர வேண்டும் என காங்கிரஸ் வலியுறுத்தியுள்ளது.

இமாச்சல பிரதேசத்தின் மண்டி தொகுதி பா.ஜ.க. எம்.பி.யான நடிகை கங்கனா ரனாவத் மணாலியில் பேசும்போது,

“இமாச்சல பிரதேச காங்கிரஸ் அரசு கடன் வாங்குகிறது. பிறகு அந்தப் பணத்தை சோனியா காந்திக்கு மடைமாற்றி விடுகிறது. மத்திய அரசு பேரிடர் நிவாரண நிதி வழங்கினால் அந்தப் பணம் முதல்வர் நிவாரண நிதிக்கு செல்கிறது. பிறகு அது சோனியா காந்திக்கு செல்கிறது.” என்றார்.

இதுகுறித்து அமைச்சர் விக்ரமாதித்ய சிங் நேற்று கூறும் போது,

“மத்திய அல்லது மாநிலஅரசின் நிதி சோனியா காந்தியிடம் தரப்படுகிறது என்பதை விட முட்டாள்தனமான கருத்து எதுவும் இருக்க முடியாது. சோனியா காந்திக்கு ஒரு ரூபா தரப்பட்டிருந்தாலும் கங்கானா அதற்கான ஆதாரத்தை காட்ட வேண்டும். இல்லாவிடில் அவர் மன்னிப்புகோர வேண்டும். இல்லையேல் அவர் மீது வழக்கு தொடரப்படும்.

கங்கனா அடிக்கடி இமாச்சலபிரதேசம் வருவதில்லை. அவரது ‘எமர்ஜென்சி“ திரைப்படத்துக்கு மத்திய தணிக்கை வாரியம் இன்னும் அனுமதி வழங்காமல் உள்ளது. இதனால் கவலை அடைந்துள்ள அவர் சோனியா காந்தி மீது அடிப்படையற்ற குற்றச்சாட்டை வைத்துள்ளார்” – என்றார்.

தனது “எமர்ஜென்சி“ திரைப்படம் மத்திய தணிக்கை வாரியத்திடம் சிக்கியுள்ளதாக கங்கனா அண்மையில் கூறினார். இப்படத்தில் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி வேடத்தில் கங்கனா நடித்துள்ளார்.




# அ.தி.மு.க. மகளிரணி பலரை ஓடவிட்டுள்ளது; கண்டன ஆர்ப்பாட்டத்தில் பா.வளர்மதி பேச்சு

"அ.தி.மு.க. மகளிரணிக்கு பெரிய வரலாறு உண்டு. இந்த அணி பலரை ஓடவிட்டுள்ளது. அதை தி.மு.கவினர் மறக்க மாட்டார்கள்."

– இவ்வாறு அக்கட்சியின் மகளிரணி மற்றும் இளம் பெண்கள் பாசறை சார்பில் சென்னையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் அமைச்சர் பா.வளர்மதி தெரிவித்தார்,

தமிழகத்தில் தொடர்ந்து அதிகரித்து வரும் போதைப் பொருள்கள் பழக்கத்தையும், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளையும் கட்டுப்படுத்தத் தவறிய தி.மு.க. அரசைக் கண்டித்து அ.தி.மு.க. மகளிரணி மற்றும் இளம் பெண்கள் பாசறை சார்பில் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.





# இஸ்ரேல் நடத்திவரும் யுத்தமானது லெபனான் மக்களுடனானது அல்ல

## பிரதமர் நெதன்யாகு தெரிவிப்பு









"இஸ்ரேலின் யுத்தம் லெபனான் மக்களுடனானது அல்ல. அது ஹிஸ்புல்லா உடனானது. நீண்டகாலமாக ஹிஸ்புல்லா உங்களை மனித கேடயங்களாக பயன்படுத்தி வருகிறது."

– இவ்வாறு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

லெபனானில் நேற்று புதிதாக இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 274 ஆக அதிகரித்துள்ளது. இதில் பெண்கள், குழந்தைகளும் அடங்குவர்.

மேலும், 1000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். தெற்கு லெபனானில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறி வருகின்றனர்.

இஸ்ரேலின் இச்செயலுக்கு ஹமாஸ் உள்ளிட்ட அமைப்புகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில், லெபனான் மக்களுக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது எக்ஸ் பக்கத்தில் காணொலிச் செய்தி ஒன்றை பகிர்ந்துள்ளார்.

அந்த காணொலியில் அவர் குறிப்பிடுகையில்,

"லெபனான் மக்களுக்கு நான் ஒரு செய்தியை கூற விரும்புகிறேன். இஸ்ரேலின் யுத்தம் உங்களுடன் அல்ல. அது ஹிஸ்புல்லா உடனானது.

நீண்டகாலமாக ஹிஸ்புல்லா உங்களை மனித கேடயங்களாக பயன்படுத்தி வருகிறது. உங்களுடைய அறைகளில் ரொக்கெட்டுகளையும், கேரஜ்களில் ஏவுகணைகளையும் வைத்திருக்கிறது.

அந்த ரொக்கெட்டுகளும், ஏவுகணைகளும் நேரடியாக எங்கள் நகரங்கள் மீதும் எங்கள் குடிமக்கள் மீதும் குறி வைக்கப்பட்டன. ஹிஸ்புல்லாவின் தாக்குதலில் இருந்து எங்கள் மக்களை பாதுகாக்க நாங்கள் இந்த் ஆயுதங்களை அப்புறப்படுத்த வேண்டும்.

இன்று காலை முதல், ஆபத்தில் இருந்து விலகிச் செல்லுமாறு உங்களை இஸ்ரேலிய , இராணுவப் படை எச்சரித்தது. இந்த எச்சரிக்கையை தீவிரமாக எடுத்துக் கொள்ளுமாறு நான் உங்களை வலியுறுத்துகிறேன்.

உங்களுடைய உயிர்களுக்கும் உங்கள் அன்புக்குரியவர்களின் உயிர்களுக்கும் ஹிஸ்புல்லா ஆபத்தை ஏற்படுத்த அனுமதிக்காதீர்கள். லெபனானுக்கு ஹிஸ்புல்லா ஆபத்தை ஏற்படுத்த அனுமதிக்காதீர்கள்.

தயவுசெய்து ஆபத்திலிருந்து இப்போதே விலகிச் செல்லுங்கள். எங்களுடைய இலக்கு முடிந்ததும், நீங்கள் உங்களுடைய வீடுகளுக்கு திரும்பலாம்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

# சோயுஸ் எம்.எஸ்- 25 விண்கலம் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பியது





விண்வெளிக்கு நாசா மற்றும் ரஷ்ய விண்வெளி வீரர்கள் மூன்று பேருடன் சென்ற சோயுஸ் எம்.எஸ் - 25 விண்கலம் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொனோனென்கோ மற்றும் ட்ரேஸி டைசன், நிகோலய் சப் ஆகிய மூன்று பேருடன் சென்ற சோயுஸ் விண்கலம் பூமிக்கு திரும்பியுள்ளது.

இதன்படி, பாராசூட் உதவியுடன் கஜகஸ்தானில் சோயுஸ் எம்.எஸ்.-25 விண்கலம் தரையிறங்கியது.

விண்கலம் பூமிக்கு தரையிறங்கியதன் மூலம், ரஷ்யாவின் கொனோனென்கோ, நிகோலய் சப் இருவரும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் அதிக நாள்கள் (374) தங்கியவர்கள் என்ற புதிய சாதனையையும் படைத்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் -25.09.2024




இன்று நீங்கள் உங்களின் அறிவுத்திறனை இழக்க நேரும். உங்கள் பேச்சில் பதட்டமும் வேதனையும் பிரதிபலிக்கும். பிரார்த்தனை நல்ல பலனைத்தரும்.

பணியில் மந்த நிலை காணப்படும். முறையான திட்டமிடல் இருந்தால் நீங்கள் சிறப்பாக செயலாற்ற முடியும்.

உங்கள் துணையுடனான உங்களின் அணுகுமுறையில் ஈகோ பிரச்சினை காணப்படும். நட்பான அணுகுமுறை மூலம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த முடியும்.

தேவையில்லாத செலவுகளால் மனக் கவலைகள் ஏற்படும். அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவுகள் கூடுதலாக இருக்கும்.

மூட்டு வலி அல்லது தோள்களில் வலி போன்ற உபாதைகள் ஏற்படலாம். பதட்டத்திலிருந்து விடுபட தியானம் மேற்கொள்ளுங்கள். அதனால் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.




இன்றைய நாளில் மோசமான சூழ்நிலை காணப்படும். அவற்றை சமாளிப்பதற்கு போதுமான தைரியம் இழந்து காணப்படுவீர்கள். எதிர்மறை எண்ணங்கள் நிறைந்திருக்கும். அதை மாற்றி நேர்மறையாக்குங்கள்.

இன்று வேலையில் மும்மரமாக இருப்பீர்கள். இணக்கமான அணுகுமுறை இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடித்து வெற்றி காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலின் காரணமாய் நல்லுறவை பராமரிக்க முடியாது. இது மகிழ்ச்சியை சீர் குலைக்கும்.

இன்று நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். குறைந்த அளவே நிதி காணப்படுவதால் உங்கள் பொறுப்புகளை பூர்த்தி செய்ய இயலாது.

பதட்டமும் உணர்ச்சிவசப்படுதலும் உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். சாந்தமாக இருப்பது உங்கள் உடல் நலத்துக்கு நல்லது.




இன்று வளர்ச்சிக்கு சாதகமான நாளாக இருக்க வாய்ப்பில்லை. ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். இன்று மனதை அமைதியாகவும் சமநிலையுடனும் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம்.

உங்கள் பணியில்முன்னேற்றமான பலன்களைக் காண்பீர்கள். இன்று உங்களுக்கு கிடைக்கும் வாய்ப்புகளால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் உணர்வுகளை திணிப்பீர்கள். நல்லிணக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள அத்தகைய உணர்ச்சி பூர்வமான போக்குகளை தவிர்ப்பது நல்லது.

பண இழப்புக் காணப்படுகின்றது. உங்கள் அலட்சியமான போக்கால் நீங்கள் பணம் இழக்க நேரலாம். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். சிறிய அளவிலான உடல் உபாதைகள் அவர்களிடம் காணப்படலாம். அதற்காக நீங்கள் பணத்தை செலவு செய்ய நேரலாம்.




இன்றைய நாள் நீங்கள் விரைந்து முடிவெடுப்பதற்கு சாதகமாக அமையும். உங்களின் உறுதியான மற்றும் தைரியமான மனநிலை மற்றும் அதனுடன் சேர்ந்த உங்கள் திறமை காரணமாக உங்கள் இலட்சியத்தில் நீங்கள் வெற்றி காண்பீர்கள்.

இன்று குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பதில் தாமதம் இருக்கும்.

உங்கள் துணையிடம் இனிமையாகப் பேசுவீர்கள். இது உங்கள் துணையுடனான நல்லிணக்கத்தை மேம்படுத்த உதவும்.

பணவரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் தேவைகளை சமாளிக்க போதுமான பணம் காணப்படும். உங்கள் தேவைகளுக்காக சிறு கடன்கள் வாங்குவீர்கள்.

உங்களின் மகிழ்ச்சியான மனநிலை உங்களை நல்ல ஆரோக்கியத்துடன் வைத்திருக்க உதவும்.




இன்று அழுத்தமான சூழ்நிலைகளும் வெற்றிக்கு குறைந்த வாய்ப்புகளும் காணப்படுகின்றன. தினசரி அலுவல்களை எச்சரிக்கையான அணுகுமுறையுடன் கையாளவும்.

உங்களிடம் காணப்படும் குறைந்த தன்னம்பிக்கை காரணமாக திறமையாக பணிகளை ஆற்றுவது கடினம். இதனால் பணிகளில் தொய்வு காணப்படும். புணியாற்றும் முறைகளை திட்டமிடுவது நல்லது.

புரிந்துணர்வில் காணப்படும் பிரச்சினைகள் காரணமாக வாக்குவாதங்கள் ஏற்படும்.உங்கள் துணையுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இன்று வீணாண செலவுகள் செய்வதற்கான சாத்தியம் உள்ளது. குடும்பத்திற்காக கூடுதல் செலவினங்களை செய்வீர்கள். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால்களில் வலி காணப்படலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். தினசரி செயல்களை மேற்கொள்வதும் கூட இன்று கடினமாக இருக்கும். களிப்பான அணுகுமுறையை பராமரிப்பதன் மூலம் இன்று நற்பலன்களைக் காணலாம்.

பணிகளில் தவறுகள் நேரலாம். பணிகளில் தவறுகள் நேராமல் தடுக்க உங்கள் நிலைமையை உத்தேசித்து உங்கள் செயல்திறனை மேம்படுத்த வேண்டும்.

பாதுகாப்பின்மை என்ற உணர்வு உங்களை பாதிக்கும். அதனை உங்கள் துணையிடத்திலும் வெளிப்படுத்துவீர்கள். இது உறவில் நல்லிணக்கத்தை பாதிக்கும். உங்கள் துணையுடன் சேரந்து இன்றைய நாளை கழிப்பதற்கு உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

செலவுகள் பெருகி காணப்படும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு நீங்கள் கடன் வாங்குவீர்கள்.

சளித்தொல்லைகளால் பாதிப்புகள் ஏற்படலாம். குளிர்மையான உணவுகள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் செயல்களில் உணர்ச்சி வசப்படக் கூடாது. அமைதியாக இருந்தால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். வெளியிடங்களுக்குச் செல்வது ஆறுதலை அளிக்கும்.

குறித்த நேரத்துக்குள் கொடுக்கப்பட்ட பணிகளை முடிப்பீர்கள். உங்களின் சிறப்பான செயல்திறன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கைக்கு பாத்திரமாவீர்கள்.

உங்கள் துணையுடன் உங்களின் அகந்தையான போக்கை காண்பிப்பதால் உறவின் நல்லிணக்கம் சீர்குலையும். மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ள அத்தகைய உணர்வுகளை தவிர்த்துவிடுங்கள்.

தேவையில்லாத செலவினங்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதால் உங்கள் செலவு செய்யும் பழக்கத்தை கட்டுப்படுத்துவது அவசியம். நிதியின் ஸ்திரத்தன்மையை பராமரிக்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.

தொடை மற்றும் கால்களில் வலி காணப்படலாம். யோகா மேற்கொள்வது சிறந்த பலனைத்தரும்.




உறுதியுடனும் தைரியத்துடனும் செயற்பட்டு இன்று செயல்களில் வெற்றி கண்டு மகிழ்வீர்கள். உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

உங்களின் பணியாற்றும் முறையில் உங்கள் திறமை வெளிப்படும். நீங்கள் செய்த பணிக்காக நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடிகளாய் மகிழ்ச்சியையும் களிப்பையும் அனுபவிப்பீர்கள்.

இன்று பணம் அதிக அளவில் காணப்படும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். உங்களுக்கு ஆழ்ந்த திருப்தி உண்டாகும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளுமின்றி முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் மகிழ்ச்சியாக காணப்படுவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -25.09.2024




முக்கியமான விஷயங்களை நிறைவேற்றுவதற்கு உகந்த நாள். ஆன்மீகத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

உங்கள் பணிவளர்ச்சியில் தடைகள் காணப்படும். முறையான திட்டமிடல் மூலம் பணிகளைக் கையாண்டால் பணிச் சுமைகளைக் கையாளலாம்.

உங்கள் துணையுடனான நேர்மையான போக்கு அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். இந்த நேர்மை சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வழிவகுக்கும்.

பணம் அதிகம் பெறுவதற்கான அதிர்ஷ்டம் உள்ளது. கணிசமான தொகையை சேர்ப்பீர்கள். பயனுள்ள விஷயங்களுக்கு பணத்தை செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆன்மீக சக்திகளின் காரணமாக ஸ்திரமான ஆரோக்கியத்தை நீங்கள் பராமரிக்க முடியும்.




உங்கள் நலன்களை ஊக்குவிக்கும் விஷயங்களில் முடிவெடுப்பதற்கு இன்று உகந்த நாள். இன்று நீங்கள் நிறைவான திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை காண்பிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியான தருணங்களைப் பகிர்ந்து கொள்வீர்கள். இது உங்கள் துணையுடன் நல்ல நட்பான உறவு முறையை வளர்த்துக்கொள்ள உதவும்.

நிதி நிலைமை மிகவும் திருப்திகரமாகக் காணப்படும் . உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

உங்களின் சிறந்த மனநிலை காரணமாக சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.




இன்றுஅறிவுபூர்வமானஅணுகுமுறையுடன் விஷயங்களை கையாள வேண்டும். வெற்றி அடைவதற்கு நீங்கள் கடினமான முயற்சியுடன் போராட வேண்டும்.

உங்கள் செயல்திறன் மூலம் பணியில் நல்ல பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பையும் பாராட்டையும் பெறுவீர்கள்.

மோதல்கள் ஏற்படாமல் இருக்க உங்கள் துணையுடன் பேசும் போது உங்கள் வார்த்தைகளில் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். எதையும் இலேசாக எடுத்துக் கொள்ளப் பழகுங்கள்.

இன்று முக்கியமான நிதி முடிவுகளை எடுப்பதற்கு ஏற்ற நாள் அல்ல. பெரிய முதலீடுகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் அதில் நல்ல வருமானம் கிடைக்காது.

பல்வலி அல்லது செரிமானம் சம்பந்தமான பிரச்சினைகள் காணப்படலாம். ஆரோக்கியத்தில் சிறந்த கவனம் செலுத்துங்கள்.




இன்று முன்னேற்றமான பலன்கள் காணப்படும். உங்களுடைய உறுதியான முயற்சியினால் நீங்கள் மேற்கொண்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். மன ஆற்றலும் நேர்மறையான எண்ணங்களும் இருந்தால் வெற்றி கிடைக்கும்.

பணியில் தவறுகளைக் குறைக்கும் வண்ணம் உங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். கவனச் சிதறல்கள் ஏற்படாவண்ணம் கவனித்துக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையின் விருப்பததுக்கேற்ப நடந்து கொள்வீர்கள். இது உங்கள் இருவருக்கிடையேயான உறவுப் பிணைப்பை வலுப்படுத்தும்.

நிதிநிலைமை ஸ்திரத்தன்மையுடன் காணப்படும். கையில் ஓரளவு பணம் காணப்படும். அதை ஆக்க பூர்வமான வகையில் பயன்படுத்துவீர்கள்.

எந்தவிதமான உபாதைகளும் காணப்படாது. தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan
Group Chairman



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park